பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

05 09 2025 FRIDAY 6.30 PM

<u>வணக்கம்-மாநிலச் செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மகளிர் கல்விக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

2. தமிழகத்தில் சாகர் மாலா திட்டத்தின்கீழ் 93 ஆயிரத்து 715 கோடி ரூபாய் செலவில் வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார்.

3. திமுக-விற்கு எதிரான கட்சிகள் ஓரணியில் திரள வேண்டியதன் அவசியத்தை பிஜேபி வலியுறுத்தியுள்ளது.

4. விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. ஆசிய கோப்பை மகளிர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா 11-0 என்ற கோல் கணக்கில் தாய்லாந்தை வென்றது.

>>>>>>>><<<<<<<<

மகளிர் கல்விக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தேசிய நல்லாசிரியர் விருதுகளை வழங்கி அவர் பேசினார்.

உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மகளிர் தலைமையிலான வளர்ச்சிக்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்து வருவதாக அவர் கூறினார்.

இந்தியாவை அறிவுசார் வல்லரசாக உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் தேசிய கல்விக்கொள்கை கொண்டுவரப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதில் பெண் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதாகவும் திருமதி திரௌபதி முர்மு கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் 45 பேர் தேசிய நல்லாசிரியர் விருதுகளை பெற்றுக்கொண்டனர்.

திருப்பூரைச் சேர்ந்த திருமதி. விஜயலஷ்மி, குடியரசுத் தலைவரிடமிருந்து இந்த விருதை பெற்றுக் கொண்டார்.

(சவுண்ட் பைட் – அறிவிப்பு 12 செகண்ட்ஸ்)

இதேபோல், சென்னையைச் சேர்ந்த டாக்டர் ரேவதி பரமேஸ்வரனும் விருதை பெற்றார்.

(சவுண்ட் பைட் – அறிவிப்பு 12 செகண்ட்ஸ்)

தமிழக அரசு சார்பிலும் நல்லாசிரியர் விருதுகள் வழங்கப்பட்டன.

சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் இவ்விருதுகளை வழங்கினார்.

396 ஆசிரியர்கள் விருதுகளை பெற்றுக்கொண்டனர்.

இந்த விருது கிடைத்தது தமக்கு பெரிதும் மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று தென்காசி மாவட்டத்தை சேர்ந்த ஆசிரியர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(Sound Byte – ஆசிரியர் சீனியம்மாள் – 50 Sec.)*

>>>>>>>><<<<<<<<

தமிழகத்தில் சாகர் மாலா திட்டத்தின்கீழ் 93 ஆயிரத்து 715 கோடி ரூபாய் செலவில் வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார்.

தூத்துக்குடி வ உ சிதம்பரனார் துறைமுகத்தில் பசுமை ஹைட்ரஜன் முன்னோடி ஆலையை திறந்துவைத்த பின் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

சென்னை துறைமுகம், காமராஜர் துறைமுகம் மற்றும் வ உ சிதம்பரனார் துறைமுகங்களில் சாகர் மாலா திட்டத்தின்கீழ் வளர்ச்சித் திட்டங்கள் நடைபெற்று வருவதாக அவர் தெரிவித்தார்.

கடல்சார் வளர்ச்சிக்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

கடல்சார் வாணிபத் திட்டத்தில் 80 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு செய்யப்பட்டு வருவதாகவும் திரு சர்பானந்த சோனோவால் தெரிவித்தார்.

>>>>>>>><<<<<<<<

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக-வுக்கு எதிரான கட்சிகள் ஓரணியில் திரள வேண்டியதன் அவசியத்தை பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இன்று நெல்லையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்கள் நலனில் அக்கறையின்றி திமுக அரசு செயல்படுவதால் அனைத்துத் தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

முதலமைச்சரின் வெளிநாட்டு பயணங்களின்போது பெறப்பட்ட முதலீடு குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட தயங்குவது ஏன் என்றும் திரு நயினார் நாகேந்திரன் வினவினார்.

>>>>>>>><<<<<<<<

மத்திய அரசு மேற்கொண்ட சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்த நடவடிக்கைக்கு அனைத்துத் தரப்பினரும் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

இதன்மூலம் உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கும் என்றும், உற்பத்தி செலவு குறையும் என்றும் ஜவுளி ஏற்றுமதியாளர் சங்கத்தின் தலைவர் திரு கோபால கிருஷ்ணன், எமது கரூர் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(Sound Byte – கோபால கிருஷ்ணன் – 49 Sec. )*

இந்த வரி குறைப்பு வரவேற்கத்தக்கது என்று சென்னை ஹோட்டல் சங்கத் தலைவர் திரு ரவி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(Sound Byte – ரவி – 43 Sec. )*

>>>>>>>><<<<<<<<

விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு. செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

>>>>>>>><<<<<<<<

*மாவட்டச் செய்திகள்*

மயிலாடுதுறை மாவட்டம் வானாதி ராஜபுரத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் இன்று திறக்கப்பட்டது.

>>>>>>>><<<<<<<<

சிவகங்கை மாவட்டத்தில் இல்லந்தோறும் சென்று மாற்றுத்திறனாளிகளை கண்டறிவதற்கான பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாக ஆட்சியர் திருமதி பொற்கொடி கூறியுள்ளார்.

>>>>>>>><<<<<<<<

திருவண்ணாமலை மாவட்டத்தில் கள்ள துப்பாக்கி வைத்திருப்பவர்கள் தாங்களாகவே முன்வந்து அவற்றை ஒப்படைப்பதற்கான விழிப்புணர்வு முகாம் வனத்துறை சார்பில் இன்று நடைபெற்றது.

>>>>>>>><<<<<<<<

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய கோப்பை மகளிர் ஹாக்கிப் போட்டி சீனாவின் Gongshu-ல் இன்று தொடங்கியது.

இந்தியா தனது முதல் ஆட்டத்தில் 11-0 என்ற கோல் கணக்கில், தாய்லாந்தை வென்றது.

Mumtaz Khan, Udita, Beauty Dung Dung ஆகியோர் தலா இரண்டு கோல் அடித்தனர்.

>>>>>>>><<<<<<<<

உலக குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Sakshi மற்றும் Sanamacha Chanu காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

இங்கிலாந்தின் Liverpool-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 54 கிலோ எடைப்பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் Sakshi -யுக்ரைனின் Viktoriia -வையும், மகளிர் 70 கிலோ எடைப்பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் Sanamacha Chanu – டென்மார்க்கின் Ditte Frostholm-வையும் வென்றனர்.

>>>>>>>><<<<<<<<

Grand Swiss செஸ் போட்டியின் முதல் சுற்று ஆட்டங்களில் இந்தியாவின் Vidit Gujrathi மற்றும் Gukesh Dommaraju வெற்றிபெற்றனர்.

>>>>>>>><<<<<<<<